بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

In the Name of Allāh, the Most Gracious, the Most Merciful

# ஜும்ஆ உரை

## அஸ்ஸலாம் - அமைதியின் வாழ்த்து

## கலீஃபத்துல்லாஹ் ஹஸ்ரத் முனீர் அஹ்மத் அஸீம்(அலை) அவர்களின் சிறப்புரை



Tamil Translation of Friday Sermon by Khalifatullah Hazrat Munir Ahmad Azim dated on: 29/11/2013

25 முஹர்ரம் 1435 ஹிஜ்ரி

(29 நவம்பர் 2013)

வெளியீடு : அமீர் ஜமாத்,
TNJUSAI பத்திரிகை குழுமம்,
தமிழ்நாடு. செல் : 917502272774
E.Mail : Jusai.tn@gmail.com

بِسْمِ اللَّهِ الرَّحْمَنِ الرَّحِيم

**உலகெங்கிலும் உள்ள தனது சஹாபாக்கள் (மற்றும் அனைத்து முஸ்லிம்களுக்கும்)- அருகில் உள்ள தீவுகள், இந்தியா-கேரளா, டிரினிடாட் மற்றும் டொபாகோ முதலியவற்றை குறிப்பிட்டவாறு-தனது ஸலாத்தை தெரிவித்துக் கொண்டு-ஹஸ்ரத் முஹையுத்தீன் (அய்யதஹு) அவர்கள் தஷ்அது,தஅவூது மற்றும் சூரா அல் ஃபாத்திஹா ஓதிய பின்னர் கூறினார்கள்:**

‘இஸ்லாம்’ என்பது அர்ப்பணித்தல் மற்றும் கீழ்படிதலின் உட்கருத்தைக் குறிக்கின்ற ஒரு வார்த்தையாகும். இஸ்லாத்தின் மற்றொரு சொற் பொருள் ‘அமைதி’ என்பதாகும். எனவே இஸ்லாத்தில் வாழ்த்துதல் என்பது அமைதியைக் கொண்டாகும், அதனைக் கூறுவதென்றால் “அஸ்-ஸலாம்” என்பதாகும்.

அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: “வாழ்த்துத் தெரிவித்தல்" (அஸ்ஸலாமு அலைக்கும்) மனிதர்களுக்கான ஒரு நற்செயலாக அல்லாஹ்வால் அனுப்பப்பட்டுள்ளது, எனவே அதனை முடிந்தவரை உங்களிடையே பரப்புங்கள்.”

இஸ்லாமிய நிபந்தனையின் படி ‘(ஸலாம்)அமைதியின் வாழ்த்து’ என்பது ஒவ்வொரு முஸ்லிமுக்கும் புனிதமாக்கப்பட்ட ஒரு கடமையாகும். எல்லா முஸ்லிமின் மீதும் அவர் தனது சகோதரர்களிடம் அமைதியைப் பொழிய கடன்பட்டுள்ள அத்தகையதொரு கடமையாகும்.

அஸ்ஸலாமு அலைக்கும் (உங்கள் மீது சாந்தி உண்டாவதாக!) என்பது வெறும் சமாதானத்தின் எளியதொரு கட்டளைச் சொல் மட்டுமல்ல!ஆனால் அதில் உணரப்படுகின்ற ஒருப் பேரின்ப உணர்வும் உள்ளது; அதற்கும் மேலாக இது நம்மிடமிருந்து நமது சகோதரரின் இரட்சிப்பு, பாதுகாப்பு மற்றும் அமைதிக்கான ஓர் ஆழமான பிரார்த்தனையுமாகும். ‘நமது சகோதரர் நம்மிடமிருந்துள்ள எந்தவொரு செயலாலும் பாதிக்கப்படமாட்டார்’ என்பதை உறுதிப்படுத்தும் உட்கருத்தும் கூட இதில் உள்ளது.

**அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் அபு ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவித்தார்கள்: “நம்பிக்கை கொள்ளும் வரை நீங்கள் சுவர்க்கத்தில் நுழைய மாட்டீர்கள்; நீங்கள் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தாதவரை நீங்கள் நம்பிக்கை கொண்டவராகமாட்டீர்கள். நீங்கள் எதனை செய்தால் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தியவர்களாவீர்களோ, அதனை நான் உங்களுக்கு கற்பிக்கவா? (அது) உங்களிடையே அமைதியினை (ஸலாம் கூறுவதைப்) பரப்புங்கள் (என்பதாகும்)” (புஹாரி)**

**இஸ்லாமிய மரபின்படி (அஸ்ஸலாமு அலைக்கும் என்ற) அமைதியின் வாழ்த்தானது, மக்கள் நம் மீது கொண்டுள்ள மோசமான நோக்கங்களைக் கூட சிதறடித்துவிடும் அத்தகையதொரு பெரிய தாக்கத்தினைக் கொண்டுள்ளது; இதைப் பற்றி அல்லாஹ்வின் தூதர்(ஸல்) கூறினார்கள்: "நீங்கள் தீமையின் பக்கம் சாய்ந்துள்ள மக்களைக் கடந்து செல்லும்போது, அவர்களுக்கு வாழ்த்துக் கூறுங்கள், (அதனால்) அவர்களுக்கு உங்கள் மீதான தீய நோக்கமும், வெறுப்பும் மறைந்துவிடும்." (புஹாரி)**

சில சமயங்களில் தங்களது முஸ்லீம் சகோதரரின் (ஸலாம்)வாழ்த்திற்கு பதிலளிக்காத மக்களைப் பார்ப்பது பெரும் ஏமாற்றத்தை (அல்லது திகைப்பை) ஏற்படுத்துகின்றது. ஸலாத்திற்க்கு பதிலளிப்பதும், (ஸலாம்) கூறுவதும் ஒவ்வொரு முஸ்லிமுக்கும் புனிதமான கடமை அல்லவா?

குர்ஆன் இதற்கு கட்டாயத் தடையை தெளிவான வாக்கியங்களில் வெளிப்படுத்தியுள்ள காரணத்தால், ஒருவரின் ஸலாத்திற்கு பதிலளிக்காமல் இருப்பதற்கு நாம் எவ்வாறு துணிந்திடுவோம்? (மற்றவர்களுக்கு வாழ்த்துக் கூறுவதற்கு முன்பு நீங்கள் அவர்களை (கூர்ந்து ஆராய்ந்து) மதிப்பிடுவீர்களா?)

وَإِذَا حُيِّيتُم بِتَحِيَّةٍ فَحَيُّوا بِأَحْسَنَ مِنْهَا أَوْ رُدُّوهَا ۗ إِنَّ اللَّـهَ كَانَ عَلَىٰ كُلِّ شَيْءٍ حَسِيبًا

**"உங்களுக்கு யாரேனும் நல் வாழ்த்துத் தெரிவித்தால் அதனை விடச் சிறந்த முறையில் வாழ்த்துங்கள் அல்லது (குறைந்தது) அதனையே திருப்பிக் கூறுங்கள். நிச்சயமாக அல்லாஹ் எல்லாவற்றையும் கணக்கெடுப் பவனாவான்" (4: 87)**

ஆகவே, தங்களது (குறிப்பிட்ட) சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் (அல்லது சகோதர உரிமைக் கொண்டவர்களை) வாழ்த்தாமல் துணிவு கொள்பவர்களுக்கு (இது) ஓர் அறிவுரையாகும்; ஸலாம் சமரசத்தின் கதவை திறக்கின்றது. சமாதான வாழ்த்துக்கூறும் செயலினால் உடைந்த உறவுகளினால் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் விரைவாக தீர்க்கப்பட்டுவிடுகின்றன.

**(ஹதீஸில் இவ்வாறு வருகின்றது) மூன்று இரவுகளுக்கு மேல் அவரது சகோதரரின் உறவை முறித்துக் கொள்வது ஒரு முஸ்லிமிற்கு ஆகுமானதல்ல; அவர்கள் (ஒருவருக்கொருவர்) சந்திக்கும்போது, (அவர்களில்) ஒருவர் மற்றவரிடமிருந்து தனது முகத்தைத் திருப்பிக் கொள்வதும், பிந்தையவர் முந்தையவரிடம் தனது முகத்தைத் திருப்பிக் கொள்வதும் (ஆகுமானதல்ல!); அவர்கள் இருவரில் மிகவும் சிறந்தவர் யாரெனில் அவர்களில் முதலில் வாழ்த்துக் கூறுபவரே! (புஹாரி)**

**இஸ்லாத்தில் வாழ்த்துத் தெரிவித்தலானது தற்புகழ்ச்சியையும் பெருமையை யும் குறைத்து விடுகின்றது, ஏனெனில் இஸ்லாத்தில் அவ்விரு குணங்களுக்கு எந்த இடமும் இல்லை. நாம் முடிந்தவரை ஸலாம் கூறுவதை நடைமுறைப் படுத்துவது மட்டுமே அவற்றை அழித்திடும் (சிறந்த வழியாக) உள்ளது. நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள், "முதலில் வாழ்த்து தெரிவிப்பவர் பெருமை (அல்லது கர்வத்தி)லிருந்தும் விடுபட்டவராவார்". (புஹாரி).**

ஒவ்வொரு முஸ்லிமும் மற்றொரு முஸ்லிமிற்கு சகோதரராவார். அவர் தனக்கு சில கடமைகளை செய்ய கடன்பட்டுள்ளார். அவற்றில் அமைதியின் வாழ்த்து (ஸலாம்) கூறுவதும் அடங்கியுள்ளது. நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: "ஒவ்வொரு முஸ்லிமிற்கும் தனது சகோதரருக்காக செய்யவேண்டிய ஆறு கடமைகள் உள்ளன:

1. அவர் நோய்வாய்ப்பட்டிருக்கும்போது அவரை (சென்று) சந்திப்பது.

2. அவர் முன்னிலையிலும் அவர் இல்லாத நிலையிலும் அவருக்காக எப்போதும் நன்மையை விரும்புதல்.

3. கடினமான சமயங்களில் அவருக்கு உதவுதல்.

4. அவரைச் சந்திக்கும் போது அவரை “அஸ்ஸலாமு அலைக்கும்” என்று கூறி வாழ்த்துதல்.

5. அவர் தும்மும்போது “அல்லாஹ் உங்கள் மீது கருணை காட்டுவானாக!” (யர்ஹமுகல்லாஹ்!) என்று பதிலளித்தல்.

6. அவரது இறுதி சடங்கில்(ஜனாஸாவில்) கலந்து கொள்ளல். ” (புஹாரி)

ஹஸ்ரத் ஆதம்(அலை) அவர்களுக்கு அல்லாஹ் வழங்கிய முதல் கட்டளை இஸ்லாமிய நல்லொழுக்க போதனைகளின்படி ஸலாம் (கூறுவதை) கற்றலாகும். **(எம்பெருமானார்) ஹஸ்ரத் நபி(ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் அபூ ஹுரைரா(ரலி) அவர்கள் அறிவித்தார்கள்: “அல்லாஹ் ஆதம் (அலை) அவர்களை படைத்தபோது அவன் கூறினான்: 'சென்று அந்த மலக்குகளின் குழுவிற்கு வாழ்த்துக் கூறுங்கள், அவர்களின் வாழ்த்திற்கு செவிசாயுங்கள்; ஏனென்றால் அது(வே) உங்களது மற்றும் உங்களது வழித்தோன்றல்களின் வாழ்த்தாக இருக்கும்'.” (புகாரி)**

இந்த மரபின்படி, (அஸ்ஸலாமு அலைக்கும் என்பதைத் தவிர) வாழ்த்துக் கூறலின் மற்ற வடிவங்கள் அனைத்தும் முற்றிலும் மனிதனின் கண்டு பிடிப்புகளாகும். (இஸ்லாம் கற்பித்துள்ளதன் படி) அமைதிக்கான வாழ்த்துக்கள் மட்டுமே இறைவனின் போதனைகளின்படி அமைந்ததும், மனிதன் உருவான திலிருந்தே இருக்கக் கூடியதுமாகும். இதனால் தான் வாழ்த்துக் கூறலின் மற்ற வடிவங்கள் அனைத்தும் மனித வாழ்க்கையின் எல்லா சூழ்நிலைகளுக்கும் ஒத்துப் போகாமல் இருப்பதை நாம் காண்கின்றோம். ஓர் உதாரணத்தை மட்டும் எடுத்துக் கொள்வோமேயானால், பயங்கரமாக துன்பப்படுகின்ற ஒருவருக்கு “குட் மார்னிங்-காலை வாழ்த்துக்கள்” என்று ஒருவரால் வாழ்த்தக் கூற முடியாது. ஆனால் அதற்கெதிரில், இறைவனின் சமாதானத்தையும் இரட்சிப்பையும் அவரது ஆதரவில் நாம் மன நிறைவுடன் கூறி (இறைவனை) வேண்டிக் கொள்ளலாம், அது அவருடைய துன்பமான அல்லது மகிழ்ச்சியான நேரமாக இருப்பினும் சரியே!.

சுவர்கத்தின் வாயில்கள் வழியாக நுழைவதற்கு முன்பு அல்லாஹ்வின் உண்மையான அடியார்களை மலக்குகள் அமைதி (ஸலாம்) என்ற வார்த்தையுடன் வாழ்த்துவதாக குர்ஆன் கூறுகின்றது .

وَسِيقَ الَّذِينَ اتَّقَوْا رَبَّهُمْ إِلَى الْجَنَّةِ زُمَرًا ۖ حَتَّىٰ إِذَا جَاءُوهَا وَفُتِحَتْ
أَبْوَابُهَا وَقَالَ لَهُمْ خَزَنَتُهَا سَلَامٌ عَلَيْكُمْ طِبْتُمْ فَادْخُلُوهَا خَالِدِينَ

“ஆனால், எவர் தமது இறைவனுக்கு அஞ்சி நடந்து கொண்டார்களோ அவர்கள் சொர்க்கத்திற்கு கூட்டம் கூட்டமாக கொண்டு வரப்படுவார்கள், அங்கு அவர்கள் வந்ததும், அதன் வாயில்கள் திறக்கப்படும், அதன் காவலர்கள் அவர்களை நோக்கி,” உங்கள் மீது சாந்தி உண்டாகட்டும்!; நீங்கள் தூய்மையாகிவிட்டீர்கள்; ஆகவே அதில் நுழையுங்கள், நித்தியமாக தங்கியிருங்கள் என்று கூறுவார்கள்.” **(39: 74)**

இறை நல்லடியார்களின் ஆன்மாக்களை கைப்பற்ற வரும் மலக்குகள் “உங்கள் மீது சாந்தி உண்டாகட்டும்” என்று கூறுவார்கள் என திருக்குர்ஆன் நமக்குக்

கூறுகின்றது.

الَّذِينَ تَتَوَفَّاهُمُ الْمَلَائِكَةُ طَيِّبِينَ ۙ يَقُولُونَ سَلَامٌ عَلَيْكُمُ ادْخُلُوا الْجَنَّةَ بِمَا كُنتُمْ تَعْمَلُونَ

"(இறையச்சத்துடன் நடப்பவர்களாகிய அவர்கள் தூயவர்களாய் இருக்கும் நிலையில்,வானவர்கள் அவர்களின் உயிர்களைக் கைப்பற்றி உங்களுக்கு சாந்தி உண்டாவதாக! உங்களுடைய நற்செயல்களுக்குப் பதிலாக நீங்கள் சுவர்க்கத்தில் நுழையுங்கள்! என்று கூறுவார்கள்" (16:33).

சுவர்க்கத்தில் குடிகொண்டவர்களை அஸ்ஸலாமு அலைக்கும் (உங்கள் மீது சாந்தி உண்டாகட்டும்) என்ற கட்டளைச் சொல்லைக் கொண்டே இறைவனும் வாழ்த்துவான் என்று அல்-குர்ஆன் கூறுகின்றது .

سَلَامٌ قَوْلًا مِّن رَّبٍّ رَّحِيمٍ

**"மேன்மேலும் கருணை காட்டும் இறைவனிடமிருந்து வாழ்த்தாக அவர்களுக்கு ஸலாம் என்றுக் கூறப்படும்" (36: 59).**

**வேண்டுதல்** (துஆ)

என் இறைவா! வாழ்வு மற்றும் மரணத்தின் சோதனைகளில் நான் உன்னிடமே அடைக்கலம் தேடுகிறேன். என் இறைவா! அல்லாஹ்வே!, உன்னுடைய விருப்பத் திற்கு கீழ்ப்படிவதில் என்னை உறுதிப்படுத்தவும், என்னை சரியான பாதையில் வழிநடத்தவும் நான் உன்னிடம் வேண்டுகிறேன். உனது அருள்களுக்கு என்னை நன்றியுள்ளவனாக ஆக்கிடவும், (உனக்குரிய) எனது வணக்கவழிபாட்டில் உனது திருப்தியை ஈர்த்திடவும், நான் உன்னை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். நீ எனக்கு நல்லதை வழங்கிடவும், நீ (என்னிடத்தில்) அறிந்துள்ள தீமைகளிலிருந் தும் என்னைப் பேணிக்காக்கவும், நான் வேண்டுகிறேன். நீ அறிந்துள்ள (என்னுடையப்)பாவங்களுக்காக நான் உன்னிடம் பாவமன்னிப்பு கோருகிறேன். என் இறைவா!, அல்லாஹ்வே!, நான் செய்த, நான் மறந்துவிட்ட, நான் மறைத்து வைத்த, நான் வெளிப்படையாக செய்த தவறு (களனைத் தையும்) எனக்கு மன்னிப்பாயாக!. என்னைவிட நீயே நன்கு அறிந்தவனாவாய்!, தூரத்தில் இருப்பவற்றையும் நீயே அருகில் கொண்டுவரக்கூடியவனாக இருக்கின்றாய்! மேலும் உன்னைத் தவிர வேறு இறைவன் இல்லை!. (ஆமீன்).



## கலீஃபத்துல்லாஹ் ஹஸ்ரத் முனீர் அஹ்மது அஸீம் (அலை) அவர்கள்

(அஸ்ஸலாமு அலைக்கும் என்பதைத் தவிர) வாழ்த்துக் கூறலின் மற்ற வடிவங்கள் அனைத்தும் முற்றிலும் மனிதனின் கண்டு பிடிப்புகளாகும். (இஸ்லாம் கற்பித் துள்ளதன் படி) அமைதிக்கான வாழ்த்துக்கள் மட்டுமே இறைவனின் போதனைகளின்படி அமைந்ததும், மனிதன் உருவானதிலிருந்தே இருக்கக் கூடியதுமாகும். இதனால் தான் வாழ்த்துக் கூறலின் மற்ற வடிவங்கள் அனைத்தும் மனித வாழ்க்கையின் எல்லா சூழ்நிலை களுக்கும் ஒத்துப் போகாமல் இருப்பதை நாம் காண் கின்றோம்.

ஓர் உதாரணத்தை மட்டும் எடுத்துக் கொள்வோமேயா னால், பயங்கரமாக துன்பப்படுகின்ற ஒருவருக்கு “குட் மார்னிங் - காலை வாழ்த்துக்கள்” என்று ஒருவரால் வாழ்த்துக் கூற முடியாது. ஆனால் அதற்கெதிரில், இறை வனின் சமாதானத்தையும் இரட்சிப்பையும் அவரது ஆதரவில் நாம் மன நிறைவுடன் கூறி (இறைவனை) வேண்டிக் கொள்ளலாம், அது அவருடைய துன்பமான அல்லது மகிழ்ச்சியான நேரமாக இருப்பினும் சரியே!.